**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 232/2022 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | சுப்பன் |
| Father Name | : | நாச்சி |
| Village | : | பாப்பம்பாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 70 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 07.10.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது பாப்பம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். வெள்ளகோவிலில் உள்ள பொன்னுச்சாமி என்பவருக்கு சொந்தமாக தோட்டத்தில் கூலி வேலை செய்தேன். கடந்த 3 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நான் பொன்னுச்சாமி கவுண்டர் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தபோது அவரது பக்கத்து தோட்டத்துக்காரரான சக்திவேல் கவுண்டருக்கு சொந்தமான 10 வெள்ளாடுகள் பொன்னுச்சாமி கவுண்டர் தோட்டத்தில் பயிர் செய்திருந்த வெள்ளை சோளப்பயிர்களை ஆடுகள் மேய்ந்தது. அந்த ஆடுகளை நான் விரட்டிவிட்டேன். அதை பார்த்த ஆஜர் எதிரி சக்திவேல் கவுண்டர் "வேலைக்கார தாயோழி நாய் யார்டா நீ ஆட்டை முடுக்க" எனச் சொல்லி 10 அடி தள்ளி நின்றுகொண்டு ரோட்டில் கிடந்த கல்லை எடுத்து எனது மூக்கில் அடித்ததில் மூக்கில் பலத்த காயம் ஏற்பட்டு தையல் போடப்பட்டுள்ளது. பின்னர் பொன்னுச்சாமி கவுண்டர் என்னை வெள்ளகோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். அங்கிருந்து எனது மனைவி என்னை சிகிச்சைக்காக காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். பின்னர் மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். பின்னர் வெள்ளகோவில் காவல் நிலையத்தில் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம்

காட்டப்படும் கல்தான் சம்பவத்தன்று ஆஜர் எதிரி என்னை அடிக்கப்பயன்படுத்தியதாகும். **அது சா.பொ.1 குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் பொன்னுச்சாமி தோட்டத்தின் வேலையாள் என்றால் சரிதான். பொன்னுச்சாமிக்கும் எதிரிக்கும் பொன்னுச்சாமி தோட்டத்தில் தண்ணீர் விற்பது சம்பந்தமாக ஏற்கனவே பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். கம்பி வேலி போடுவதிலும் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். சுமார் 10 வெள்ளாடுகள் பொன்னுச்சாமியின் தோட்டத்தில் மேய்ந்தது என்றால் சரிதான். அந்த இடத்தில் எதிரிக்கு தோட்டம் இல்லை என்றால் சரிதான். பொன்னுச்சாமிக்கும் எதிரிக்கும் 10 சென்ட் இடம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். பொன்னுச்சாமி தோட்டத்தை சுற்றிலும் கம்பிவேலி உள்ளது என்றால் சரிதான். வேலி ஓரத்தில் மேய்ந்த ஆடுகளைத்தான் நானும், நாச்சி, பொன்னுச்சாமியும் விரட்டினோம் என்றால் சரிதான். வேலி ஓரத்தில் மேய்ந்த ஆடுகளை நாச்சி என்பவர்தான் கல் எடுத்து முடுக்கினார் என்றால் சரிதான். நாச்சி என்பவர் கல்லை எடுத்து ஆட்டின் மீது வீசியதில் எதிரியின் தலையில் பட்டு காயம் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும் ஆட்டை முடுக்கும்போது பொன்னுச்சாமி என்பவர் வீசிய கல்தான் என் மீது பட்டது என்றால் சரியல்ல. எதிரி என்னை தாக்கவும் இல்லை, எந்த கல்லை வீசவும் இல்லை என்றும், பொன்னுச்சாமி என்பவர் வீசிய கல்தான் என் மீது பட்டது என்றும் நான் பொன்னுச்சாமியின் வேலையாள் என்பதால் எதிரியின் மீது வழக்கு கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தில் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து எதிரியின் மீது பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.10.07 18:29:47 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 232/2022 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | பொன்னுச்சாமி |
| Father Name | : | நாச்சிமுத்து |
| Village | : | பாப்பம்பாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 73 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 07.10.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது முத்தூர் ரோட்டில் உள்ள HP பெட்ரோல் பங்க அருகே குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்தமான தோட்டம் வள்ளியரச்சல் ரோட்டின் மீது உள்ளது. அ.சா.1 எனது தோட்டத்தில் கூலிக்கு வேலை செய்தார். 2022 ஆம் வருடம் மே மாதம் தேதி சரியாக ஞாபகம் இல்லை. எனது தோட்டத்தில் சுப்பன் வேலை செய்துகொண்டிருந்தபோது எனது பக்கத்து தோட்டத்துக்காரரான ஆஜர் எதிரிக்கு சொந்தமான 6, 7 ஆடுகளுக்கு மேல் இருக்கும். எனது தோட்டத்தில் பயிர் செய்திருந்த வெள்ளை சோளப்பயிர்களை ஆடுகள் மேய்ந்தது. அந்த ஆடுகளை சுப்பன் விரட்டிவிட்டார். அதை பார்த்த ஆஜர் எதிரி "வேலைக்கார தாயோழி நாய் யார்டா நீ ஆட்டை முடுக்க" எனச் சொல்லி 10 அடி தள்ளி நின்றுகொண்டு ரோட்டில் கிடந்த கல்லை எடுத்து சுப்பனின் மூக்கில் அடித்ததில் மூக்கில் பலத்த காயம் ஏற்பட்டு தையல் போடப்பட்டுள்ளது. பின்னர் எனது மகன் வெள்ளகோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். அங்கிருந்து சுப்பனின் மனைவி அவரை சிகிச்சைக்காக காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். பின்னர் மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

அ.சா.1 சுப்பன் மற்றும் நாச்சி ஆகியோர்கள் எனது தோட்டத்தின் பணியாளர்கள் என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். 10 சென்ட் இடம் சம்பந்தமாக கம்பி வேலி போடுவதில் எனக்கும் எதிரிக்கும் பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. எனது தோட்டத்தை சுற்றிலும் கம்பி வேலி உள்ளதா என்றால் முன்னாடி மட்டும் கம்பி வேலி உள்ளது. பின்னாடி மர முள் வேலி உள்ளது. ஆடு மேய்வதாக எதிரிக்கு சொன்னேனா என்றால் இல்லை. அவராதான் வந்தார். எனது தோட்டத்திற்கு வடதுபுறம் மண் தடம் உள்ளதா என்றால் இல்லை. எனது தோட்டத்திற்கு வலதுபுறமும், மேல்புறமும் எதிரியின் காடு உள்ளது என்றால் சரிதான். சம்பவ நடந்த இடத்தில் இணை கூலி இல்லை. நாச்சி ஆடுகளை கல்லை எடுத்து முடுக்கும்போது எதிரிக்கு தலையில் காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. எதிரியே கல்லை எடுத்து தலையில் கொட்டி காயம் ஏற்படுத்திக்கொண்டார். எதிரி பொன்னி கிளினிக்கிற்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 யை எனது மகன்தான் மருத்துவ சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தார். கல்லை போலீசார் எடுத்துவந்து என்னிடம் காட்டினார்கள். அ.சா.1 யுடன் எனது மகன்தான் சென்றார். பின்னிட்டு அவரது உறவினர்கள் சென்றார்கள். நாச்சி என்பவர் கல்லை எடுத்து ஆட்டின் மீது வீசியதில் எதிரியின் தலையில் பட்டு காயம் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும் ஆட்டை முடுக்கும்போது நான் வீசிய கல்தான் சுப்பன் மீது பட்டது என்றால் சரியல்ல. எதிரியின் மீது வன்கொடுமை சட்டத்தின்படி வழக்கு கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தில் எதிரி மீது எனது வேலையாள் அ.சா.1 யை வைத்து பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.10.07 18:29:54 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்